# வருடாந்த அறிக்கை 2011

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான

தராதர அங்கீகார சபை

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

| உள்ளடக்க அட்டவணை | | |
|---|---|---|
| | விடயம் | பக்கம் |
| 1. | தரக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் | 3 |
| 2. | தொலைநோக்கு, இலக்கு மற்றும் குறிக்கோள்கள் | 4 |
| 3. | **இலங்கை தராதர அங்கீகார சபை சட்டம்** | 5 |
| 4. | **தலைவரின் செய்தி** | 6 |
| 5. | **பணிப்பாளர் / பி.நி.அதிகாரியின் நிறைவேற்றுத் தொகுப்பு** | 9 |
| 6. | **ஆளுநர் சபை** | 12 |
| 7. | **முகாமைத்துவம், குழுக்கள், சபையின் ஊழியர்கள்** | 13 |
| 8. | நடவடிக்கைகள் | 15 |
| 9. | முக்கிய செயற்பாடுகள் – 2011 | 19 |
| 10. | சர்வதேச பெறுபேறுகளும் நிகழ்வுகளும் | 20 |
| 11. | சக்திவள கட்டமைப்பும் பயிற்சித் திட்டங்களை நடத்துதலும் | 21 |
| 12. | நிதித்துறைச் செயற்பாடுகள் - 2011 | 21 |
| 13. | நிதி அறிக்கைகள் - 2011 | 23 |
| 14. | நிதி அறிக்கைகள் மீதான குறிப்புகள் | 26 |
| 15. | கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்கள் | 35 |
| 16. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீது தலைவரின் கருத்துக்கள் | 40 |
| 17. | SLAB யின் தராதர அடையாளங்கள் | 43 |
| 18. | தராதர அங்கீகாரத்திற்கான மதிப்பீட்டு அமைப்புக்கள் | 44 |
| 19 | ஸ்தாபக அமைப்பு இணைப்பு I - | 47 |
| | இணைப்பு II | 48 |

| | |
|---|---|
| **தரக்கட்டுப்பாட்டுக் கொள்கைகள்** | இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, அதன் வாடிக்கையாளர்களுக்கு உயர்மட்ட நேர்மை, சக்திவளம் மற்றும் திறமை என்பனவற்றை வழங்குவதில் அர்ப்பணித்துப் பணிபுரியும் சேவை நிறுவனமாகும்.<br><br>வாடிக்கையாளர்கள், ஏனைய பங்காளிகள் ஆகியோருடன் வர்த்தக சமூகத்திற்கும், தராதர அங்கீகார சேவைகளை, சர்வதேச தரங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் வழங்குவதில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அர்ப்பணித்துச் சேவையாற்றி வருகிறது. சர்வதேச அங்கீகாரத்தை மேம்படச் செய்யவென சர்வதேச அமைப்புக்களின் நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாகவும், திறமையாகவும் பங்குபற்றுவதற்கு தராதர அங்கீகார சபை தயார் நிலையில் உள்ளது.<br><br>உயர்மட்ட தொழிற்திறனில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நடவடிக்கைகளை வழங்குவதற்கு உதவும் வகையில் ஊழியர்களினதும், மதிப்பீட்டாளர்களினதும் தகைமையைத் தரமுயர்த்துவதற்கு உரிய சூழலை இலங்கை தராதர அங்கீகார சபை வழங்கும்.<br><br>அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளையும், ஒத்தியல்பு மதிப்பீடு மற்றும் தராதர அங்கீகாரம் சம்பந்தமான சூழலின் தேவைகளையும், கோரிக்கைகளையும் தொடர்ந்து மீளாய்வு செய்வதோடு, அபிவிருத்திக்கென பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளல். |

| | |
|---|---|
| **‘இந்தப் பிராந்தியத்தில் தராதர அங்கீகார முன்னணி அமைப்பாக அங்கீகரிக்கப்படுவதோடு, அதன் சேவைகள் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தையும், உற்பத்திப் பொருட்களினதும் சேவைகளினதும் ஏற்றுக்கொள்ளலையும் பெறுவதற்கு உதவுதல். ஒத்தியல்பு மதிப்பீடுகளுக்கு தராதர அங்கீகார சேவைகளை வழங்கும் போது வர்த்தகம், கைத்தொழில், அரசாங்கம் மற்றும் பொதுமக்களின் மாற்றமடையும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் புதுமை புகுத்தல்’** | **தொலைநோக்கு** |
| **‘சர்வதேச அங்கீகாரத்துடன் தராதர அங்கீகாரச் சேவைகளை வழங்குதலும், முன்னேற்றுதலும் உள்ளூர் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுக்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதில் ஒத்தியல்பு மதிப்பீடுகளுக்கு உதவுதலும்.’** | **இலக்கு** |
| சபையின் முக்கிய நடவடிக்கைகள் இனங்காணப்பட்டு, பிரதான குறிக்கோள்களாக கீழே தரப்பட்டுள்ளன.<br><br>• ISO/IEC 17011இணங்கும் வகையில் இலங்கை தராதர அங்கீகார சபையின் வழிமுறைகளை அபிவிருத்தி செய்தலும், ஸ்தாபித்தலும், முகாமைத்துவப்படுத்தலும், செயற்படுத்தலும்.<br>• ISO/IEC 17025 அடிப்படையில் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வு கூடங்களுக்கான தராதர அங்கீகாரத்தை விருத்தி செய்து நடைமுறைக்கிடல்.<br>• ISO 15189 அடிப்படையில் மருத்துவ / மருத்துவ ஆய்வு கூடங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டத்தை அபிவிருத்தி செய்தலும் நடைமுறைக்கிடலும்.<br>• ISO/IEC 17021 அடிப்படையில் வழிமுறைகளுக்கான சான்றிளித்தல் அமைப்புக்களுக்குரிய தராதர அங்கீகாரத் திட்டத்தை விருத்தி செய்தலும் நடைமுறைக்கிடலும்.<br>• ISO/IEC வழிகாட்டி 65 அடிப்படையில் சான்றிளித்தல் அமைப்புக்களுக்கு தராதர அங்கீகாரத் திட்டத்தை விருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும்.<br>• ISO/IEC 17020 அடிப்படையில் பரிசோதனை அமைப்புக்களுக்கு தராதர அங்கீகாரத் திட்டத்தை அபிவிருத்தி செய்தலும் நடைமுறைக்கிடலும்.<br>• ISO/IEC 17024 அடிப்படையில் நபர்களுக்கு சான்றளிக்கும் அமைப்புகளுக்கான தராதர அங்கீகாரத் திட்டத்தை அங்கீகரித்தலும் நடைமுறைக்கிடலும்.<br>• ISO/IEC 17043 அடிப்படையில் தேர்ச்சி சம்பந்தமான சோதனைத் நடவடிக்கைகளுக்குரிய தராதர அங்கீகாரத் திட்டத்தை அங்கீகரித்தலும் நடைமுறைக்கிடலும்.<br>• ஒத்தியல்பு மதிப்பீட்டில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் தகைமையின் அபிவிருத்திக்கென பயிற்சித் திட்டங்களை நடத்தும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டத்தை அபிவிருத்தி செய்து நடைமுறைக்கிடல்.<br>• தேசிய ரீதியில் அக்கறை கொண்டுள்ள பிரிவுகளுக்கான ஏனைய தராதர அங்கீகாரத் திட்டங்களை அபிவிருத்தி செய்து நடைமுறைக்கிடல். | **குறிக்கோள்கள்** |

| | |
|---|---|
| • இ.த.அ.ச.இன் தராதர அங்கீகார செயற்பாடுகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுதலும் சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புக்களுடனான MRA மற்றும் MLA களுக்கு ஒப்பமிடுதலும். | |

| | |
|---|---|
| **இலங்கை தராதர அங்கீகார சபை சட்டம்** | இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை இல.32 இன் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கைக்கான தேசிய தராதர அங்கீகார சபையாகும். தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செய்யப்படும் இந்த சபை 2005 ஆம் ஆண்டின் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்டம் 32 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பதின்மூன்று (13) அங்கத்தவர்களைக் கொண்ட மன்றத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. |
| **கடமைகளும் செயற்பாடுகளும்** | இலங்கையின் தேசிய மதிப்பீட்டுச் சபை என்ற நிலையில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படச் செய்வதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கான பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதில் ஒத்தியல்பு மதிப்பீடுகளுக்கு உதவுவதற்கு அவசியமான தராதர அங்கீகார சேவைகளை வழங்குவதற்கும் பொறுப்பாக உள்ளது. தொழிற்சாலைகளுக்கும், வர்த்தக சமூகத்திற்கும், அரசாங்கத்திற்கும், பொதுமக்களான பாவனையாளர்களுக்கும், பலதரப்பட்ட சேவைகளை வழங்கும் ஆய்வுகூடங்கள், சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள், பரிசோதனை நிலையங்கள் என்பனவற்றின் தராதரமும் இதில் அடங்கும்.<br><br>சட்டத்திற்கு இணங்கும் வகையில் இ.த.அ சபை கீழ்க்காணும் வழிமுறைகளை கடைப்பிடிக்கும்படி கோரப்பட்டுள்ளது.<br><br>• ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச மற்றும் தேசிய தரங்களுக்கு உட்பட்ட வகையில், தராதர ஒத்தியல்பு மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.<br>• தேசிய தரங்கள், கொள்கைகளில் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டி நெறிகளுக்கு உட்பட்ட வகையில், தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்தல்.<br>• ஒத்தியல்பு மதிப்பீடு பற்றிய ஒத்துழைப்பிற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய மன்றமாக செயற்படுதல்.<br>• தொழில்நுட்ப அறிவை மேம்படச் செய்து பரவலாக்குவதன் மூலம் ஒத்தியல்பு நடவடிக்கைகளிலும் தராதர அங்கீகாரத்திலும் உன்னத நிலையை ஏற்படுத்துதல்.<br>• தராதர அங்கீகாரம் சம்பந்தமாக தேசிய வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஆதரவளித்தல்.<br>• இதேவிதமான வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர அங்கீகாரம் சம்பந்தமாக உடன்படிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.<br>• தராதர அங்கீகாரத்தை வழங்குதல், நீடித்தல், குறைத்தல், இடைநிறுத்தல், விலக்கிக்கொள்ளல் என்பன சம்பந்தமாக ஒத்தியல்பு மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளை ஒழுங்கமைத்து, முகாமைத்துவப்படுத்தி மேற்கொள்ளல். |

## தலைவரின் செய்தி

***இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தேசிய தரம் வாய்ந்த உட்கட்டமைப்பைப் பலப்படுத்தவும், உள்நாட்டு மற்றும் சர்வதே சந்தைகளுக்கு பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதன் மூலம் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவவுமென ஸ்தாபிக்கப்பட்டது. அமைப்புக்களின் ஒத்தியல்பு மதிப்பீட்டின் தராதர அங்கீகாரம், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் சமூக நிலைபேற்றை நிச்சயிக்கும். தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் மஹிந்த சிந்தனை அடிப்படையிலான இலக்குகள் / தாக்கங்கள் என்பனவற்றில் இதுவும் ஒன்றாகும்.***

இலங்கை தராதர அங்கீகார சபை, அதன் ஐந்தாவது வருட நடவடிக்கைகளை 2011 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்துள்ளது. கடந்த ஐந்து வருட காலத்தில் திருப்திகரமான முன்னேற்றத்தை நாம் அடைந்துள்ளோம். ஆரம்பத்தில் ஊழியர்களை ஆட்சேர்ப்பதிலும், அவர்களின் திறமையை அபிவிருத்தி செய்வதிலும் நாட்டிலுள்ள பலதரப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை தயாரிப்பதிலும், இ.த.அ சபை கவனம் செலுத்தியது. அதேவேளை, இந்தக் காலகட்டத்தில் முக்கியமான அம்சங்களுள் ஒன்றாக, தராதர அங்கீகாரம் மற்றும் மதிப்பீடுகளில் வெளிவாரி நிபுணத்துவத்தை இனங்கண்டு பயிற்சி அளிப்பதாக இருந்தது. இன்று இ.த.அ சபையில் நூற்றுக்கும் அதிகமான நிபுணத்துவம் மிக்க மதிப்பீட்டாளர்கள் உள்ளனர். இந்த நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

### முக்கியமான பெறுபேறுகள்

மக்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றில் தீவிர தாக்கத்தை கொண்டுள்ள ஒழுங்கமைப்பு நிறுவனங்களின் கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் இ.த.அ. சபை கலந்துரையாடல்கள் பலவற்றை நடத்தியிருந்தது. நாம் கலந்துரையாடலை நடத்திய கட்டுப்பாட்டு அமைப்புக்களில் சுகாதார அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பன சிலவாகும்.

***தராதர அங்கீகாரம் என்பது, உலக நாடுகளில் சுய விருப்பத்தின் அடிப்படையில் இடம் பெறுவதாகும். இருந்த போதிலும், சர்வதேச வர்த்தகத்திற்கு உதவுதல், மக்களின் தேகாரோக்கியம், பாதுகாப்பு என்பனவற்றை நிச்சயித்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்த பல அரசாங்கங்கள், அவற்றின் சட்ட அமைப்புக்களில் இந்த அம்சத்தையும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. இதன் அடிப்படையில், மறைமுகமான வகையில் தராதர அங்கீகாரம் கட்டாயமாக்கப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பணிப்புரையின் பேரில் இதனை கொள்கையளவில் நடைமுறைப்படுத்த இலங்கை தராதர அங்கீகார சபை தீர்மானித்தது.***

| | |
|---|---|
| இத்தகைய நடவடிக்கையின் பலனாக தராதர அங்கீகாரத்தைப் பெறவென ISO 15189 : 2007 இணங்கும் வகையில் ஆய்வுகூட முகாமைத்துவ வழிமுறைகளை அபிவிருத்தி செய்யவும், நடைமுறைக்கிடவுமென, கொழும்பு தேசிய வைத்தியசாலை, றாகம, கண்டி, கராப்பிட்டிய. இரத்தினபுரி அரச வைத்தியசாலைகள் என்பனவற்றின் ஆய்வுகூடங்களை சுகாதார அமைச்சு இனங்கண்டுள்ளது.<br><br>2006 ஆம் ஆண்டில் தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு) 21 ஆம் இலக்க சட்டத்தை சுகாதார அமைச்சு தற்சமயம் மீளாய்வு செய்து வருகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் வைத்திய ஆய்வுகூடங்கள் சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளன. புதிய சட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கென நியமிக்கப்பட்ட குழுவிற்கு தராதர அங்கீகார சபையின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி நியமிக்கப்பட்டார். தனியார் மருத்துவ ஆய்வுகூடங்களுக்கு படிப்படியாக தராதர அங்கீகாரத்தை வழங்கும் இ.த.அ சபையின் பிரேரனை கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அங்கீகாரத்திற்கென புதிய சட்டம் சமர்ப்பிக்கப்பட்டதும் இந்தத் திட்டம் ஆலோசனைக்கு எடுக்கப்படும்.<br><br>மோட்டார் வாகனங்களில் இருந்து நச்சு வாயு வெளியேற்றப் பரிசோதனை நிலையங்களுக்கு தராதர அங்கீகாரம் வழங்குவது என்பது, இ.த.அ சபையினால் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மற்றொரு புதிய நடவடிக்கையாகும். இதற்கு அவசியமான ஆவணங்களைத் தயாரிக்கவென தொழில்நுட்ப ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த நிபுணத்துவ குழுவில் மத்திய சுற்றாடல் அதிகார சபை, மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பனவற்றின் அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.<br><br>**உலக தராதர அங்கீகார தினம்**<br>இந்த வருட உலக தராதர அங்கீகார தினத்தின் தொனிப்பொருள் 'ஒழுங்கமைப்பாளர்களின் பணிகளுக்கு ஆதரவளித்தல்' என்பதாகும். தற்போதைய சட்டங்களில் தராதர அங்கீகாரம் என்ற அம்சமும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் இதன்மூலம் | |

| | |
|---|---|
| வலியுறுத்தப்பட்டது. உலக தர நிர்ணய தினக் கொண்டாட்டங்களில் தொழில்நுட்பக் கருத்தரங்கையும், ஜுன் மாதம் 09 ஆம் திகதி தராதர மாலைப்பொழுதையும் இ.த.அ. சபை ஒழுங்கு செய்திருந்தது. தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ பவித்ரா வன்னியாராச்சி கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார். முக்கிய உரை இந்தியாவின் தேசிய தராதர அங்கீகார சபையின் பணிப்பாளர் திரு.வெங்கட் அவர்களினால் வழங்கப்பட்டது. தராதர மாலைப்பொழுது நிகழ்ச்சிகளில் கௌரவ அமைச்சரும், அமைச்சின் செயலாளர் செல்வி தாரா விஜயதிலகவும் சமூகமளித்திருந்தனர். தராதர அங்கீகார சான்றிதழ்களும் அங்கு வழங்கப்பட்டன.<br><br>**சர்வதேச அங்கீகாரம்**<br>பரிசோதனைக்கும் மருத்துவ ஆய்வுகூட தராதர அங்கீகாரத்திற்குமான சர்வதேச ஆய்வுகூட தராதர அங்கீகார கூட்டுத்தாபனத்தின் MRA ஒப்பமிடும் தகைமை 2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் இருந்து வந்தது. இந்தக் காலப்பகுதியில் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கு MRA ஒப்பமிடல் தகைமையைப் பெறவென APLAC யிடம் விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. ஆண்டின் இறுதியளவில் ஜப்பான், இந்தியா, சீனா - தாய்ப்பே ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று மதிப்பீட்டாளர்கள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 2012 நடுப்பகுதியளவில் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கும் ஒப்பமிடும் தகைமையை இ.த.அ சபை பெறுமென நான் நம்புகின்றேன். மருத்துவ மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள் சம்பந்தமான சோதனையையிட்டு இ.த.அ சபையினால் வழங்கப்பட்ட தராதர அங்கீகார சான்றிதழ்கள் சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தைப் பெறும் என்பதும், எனவே, மேலும் பல ஆய்வுகூடங்கள் இ.த.அ சபையின் தராதர அங்கீகார சான்றிதழைப் பெற்றதும் வெளிநாடுகளில் பெருமளவு செலவினத்தில் மேற்கொள்ளப்படும் மீள் பரிசோதனை அவசியமற்றது என்பதும் எனது கருத்தாகும்.<br><br>**பாராட்டுக்கள்**<br>ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இ.த.அ சபையின் நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்படுவதில் ஆதரவும், நிபுணத்துவ பங்களிப்பும் | |

| | |
|---|---|
| வழங்கியமைக்காக சபை அங்கத்தவர்களுக்கு இந்தத் தருணத்தில் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். பலதரப்பட்ட தராதர அங்கீகார / தொழில்நுட்ப குழுக்களின் அங்கத்தவர்கள் ஆற்றிய பணி பாராட்டப்பட வேண்டியதாகும். வெற்றிகரமான தராதர அங்கீகார நடவடிக்கை களுக்கு முக்கிய அம்சமாக இருந்து வரும் வெளிப்படையான சபையின் நடவடிக்கைகள் மேலும் வெளிப்படையாக இருப்பதை இந்தக் குழுக்கள் மேம்படச் செய்துள்ளன. இ.த.அ சபையிடம் இருந்து தராதர அங்கீகாரத்திற்கென விண்ணபித்த பலதரப்பட்ட அமைப்புக்களின் முகாமைத்துவ வழிமுறைகள் வெற்றிகரமாக மதிப்பீடு செய்யப்படுவதில் நிபுணத்துவம் மிக்க மதிப்பீட்டாளர்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். அவர்களுக்கு நான் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேவேளை தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அதிகாரிகளிடம் இருந்து பெறப்பட்ட ஆதரவும் பெருமளவிலான பாராட்டைப் பெறுகிறது.<br><br>இறுதியாக இ.த.அ சபை ஊழியர்களின் கடின உழைப்பை அங்கீகரித்து மனப்பூர்வமான பாராட்டை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நிறுவனத்திற்கான அவர்களது மனப்பூர்வமான விசுவாசம் இன்றி, ஐந்து வருடங்கள் என்ற குறுகிய காலப்பகுதியில் இத்தகைய முன்னேற்றத்தை சபை பெற்றிருக்க முடியாது. எதிர்காலத்திலும் சபையின் நடவடிக்கைகளை மேம்படுவதற்கென உங்களது பங்களிப்பு தொடர்ந்தும் இருந்து வரும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.<br><br><br>டிதுல் கோதாகொட<br>தலைவர் | |

SLAB அதன் நடவடிக்கைகளை 2006 ஜனவரியில் ஆரம்பித்து 2007 ஆம் ஆண்டில் அதன் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. 2011 ஆம் ஆண்டில் ஐந்து வருடகால நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தராதர அங்கீகார திட்டங்கள் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்பட்ட அதேசமயத்தில், தராதர அங்கீகார அமைப்பொன்றின் முக்கிய பொறுப்பாகவுள்ள நாட்டின் தேசிய தர உட்கட்டமைப்பை பலப்படுத்துவதிலும், ஒழுங்கமைப்பு செயற்பாடுகளில் தராதர அங்கீகாரத்தை மேம்படச் செய்வதிலும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இந்த வகையில் 2011 ஆம் ஆண்டில் இ.த.அ சபையின் செயற்பாட்டின் திறமை அதிகரிக்கப்பட்டது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதில் தராதர அங்கீகாரம் பெரிதும் உதவுகிறது. நாட்டின் தராதர அங்கீகாரத்தை முழு அளவில் வழங்குவதற்கு ஒழுங்கமைப்பு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் தொழில்நுட்பத் தீர்வுகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் பலப்படுத்தப்படுவது அவசியமாகும். வெளிவாரி மற்றும் உள்ளூர் வர்த்தகத்தில் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் சிறந்த தரம் பற்றிய கேள்விகள் அதிகரித்ததை அடுத்து, சுகாதாரம், பாதுகாப்பு, தரம் என்பன சம்பந்தமான தொழில்நுட்ப சட்டங்கள், தரங்கள், ஏனைய ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் என்பனவற்றில் பெருமளவில் உடன்பாடு காணப்பட வேண்டியிருந்தது. ஒழுங்கமைப்பு வழிமுறைகளில் சுகாதாரம், பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, மோசடி தடுப்பு அல்லது சிறந்த சந்தைப்படுத்தல் என்பன காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அங்கீகாரத்தை உள்ளடக்கும் சட்டங்களை அரச அதிகாரிகள் இலகுவில் நடைமுறைக்கிட முடியும்.

தராதர அங்கீகாரம் என்பது, சுய விருப்பத்தின் அடிப்படையிலான சேவையாக வழங்கப்படுகிறது. தன்னிச்சை வழிமுறைகளில் சேவைத்துறை உட்பட அமைப்பின் பலதரப்பட்ட துறைகளும் உற்பத்திப் பொருட்கள், வழிமுறைகள், செயன்முறைகள் என்பன சம்பந்தமாக குறிப்பிட்ட தரங்களை பெறும் நோக்கத்தில் சம அடிப்படையிலான போட்டியை நிச்சயித்து, சந்தைப்படுத்தல், ஒப்பிடுதல் என்பன இடம்பெற வகை செய்து, தராதர மதிப்பீட்டையும், சான்றிதழ் வழிமுறைகளையும் அமைத்துக் கொண்டுள்ளன. நாட்டிற்குள்ளேயும் உலகளாவிய ரீதியிலும் பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் வர்த்தகத்துறைக்கு இந்த வழிமுறைகளை செயற்படுத்த முடியும்.

தொழில்நுட்ப சட்டங்கள் (நியதிக்குட்பட்டது) அல்லது தரங்கள் (சுயவிருப்பம்) என்பன சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட தேவைகளுக்கான தராதர அங்கீகார மதிப்பீட்டிற்கு சிறந்த நம்பகமான வழிமுறைகள் தேவைப்படும். நியதிக்குட்பட்ட அல்லது சுய விருப்பத்தின் அடிப்படையிலான வழிமுறைகளின் சோதனை, பரிசோதனை, சான்றிதழ் வழங்கல் உட்பட்ட தராதர அங்கீகார மதிப்பீட்டு நடவடிக்கைகள், இவற்றை மேற்கொள்வதற்கு அவசியமான தகைமையைக் கொண்ட தராதர மதிப்பீட்டு அமைப்புக்களினால்

**பணிப்பாளர் / பி.நி.அதிகாரியின் நிறைவேற்றுத் தொகுப்பு**

“ஒழுங்கமைப்பு வழிமுறைகளில் சுகாதாரம், பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, மோசடி தடுப்பு அல்லது சிறந்த சந்தைப்படுத்தல் என்பன காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அங்கீகாரத்தை உள்ளடக்கும் சட்டங்களை அரச அதிகாரிகள் இலகுவில் நடைமுறைக்கிட முடியும்”

| | |
|---|---|
| (CAB) மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகளை வெளிப்படையாகவும், நம்பகமான முறையிலும் மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட தராதர மதிப்பீட்டு அமைப்புக்கள் தகைமை வாய்ந்தனவா என்பதை கொள்வனவாளர்கள், ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் அறிந்துகொள்வது அவசியமாகும். சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், தரங்கள் என்பனவற்றின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட தராதர அங்கீகாரத்தை வழங்குவதற்கு தராதர அங்கீகாரம் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உரிய அங்கீகாரத்தையும், ஏற்றுக்கொள்ளலையும் வழங்குகிறது. | |

| | |
|---|---|
| "நாட்டிலுள்ள சோதனை ஆய்வுகூடங்கள் சுமுகமான முறையில் செயற்படுவதற்குத் தேவையான வளிமண்டல ஆதரவை வழங்குவதற்கும் 2011 ஆம் ஆண்டில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன." | இ.த.அ சபையை எதிர்நோக்கியுள்ள சவால்கள் சர்வதேச சமூகம் மற்றும் கொள்கைகளுக்கு உட்பட்ட வகையில் தராதர அங்கீகாரத்தின் சகல அம்சங்களையும் நிலைநாட்டுவதாகும். இது தொடர்பாக பொறுப்பேற்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று இ.த.அ சபையினதும், இனங்காணப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களினதும் செயற்பாட்டில், இ.த.அ சபையின் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி நூல்கள் மற்றும் வழிமுறைகளின் அபிவிருத்தி, கடைப்பிடிப்பு, மேம்பாடு என்பன ஆகும். இது தொடர்பாக உலகளாவிய தராதர அங்கீகாரத் தேவைகளை விளங்கிக் கொள்ளுதலும், தொடர்ச்சியான கண்காணிப்பும், சர்வதேச வழிகாட்டி நெறிகளைத் தரமுயர்த்துதலும் அவசியமாகியுள்ளது.<br><br>எந்தவொரு தராதர அங்கீகார அமைப்பும் உதாசீனம் செய்ய முடியாத விடயம் - தராதர அங்கீகாரத்திற்கும் இனங்காணப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களுக்கும் ஒவ்வொரு துறையிலும், உப துறையிலும் இனங்காணப்பட்ட விசேட தேவைகளுக்கான பயிற்சிபெற்ற தகைமை கொண்ட நிபுணர்களைத் தேர்ந்தெடுப்பதும், அவர்களுக்கு மேலும் பயிற்சி அளிப்பதும் ஒரு சவாலான விடயமாகும். 2011 ஆம் ஆண்டில், நிதிப் பற்றாக்குறை மற்றும் பௌதீக வள கட்டுப்பாடு என்பன காணப்பட்ட போதிலும், தகுதிவாய்ந்த நம்பகமான நிபுணத்துவ வளத்தை இ.த.அ சபை கொண்டிருந்தது.<br><br>பொருட்கள், சேவை வழங்கல் ஆகிய துறைகளுக்கு உதவும் தராதர அங்கீகாரத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, இ.த.அ சபையின் இலக்கு மற்றும் தொலைநோக்கு என்பனவற்றின் பின்னணியில் விண்ணப்பங்களின் பலதரப்பட்ட அம்சங்களும் மதிப்பிடப்படுகின்றன. இத்தகைய முக்கிய நோக்கத்தில் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள், சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள், சோதனை நிலையங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய நான்கு (04) தராதர அங்கீகாரத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட சர்வதேச தரங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டன. |
| "மருத்துவ ஆய்வுகூடங்களின் மதிப்பீடுகளில் தகைமை அபிவிருத்தி என்பது இ.த.அ சபையினால் மேற்கொள்ளப்பட இருக்கும் மற்றுமொரு முக்கிய நடவடிக்கையாகும்." | ஆய்வுகூடங்களை சோதனையிடல், தரப்படுத்லுக்கான தராதர அங்கீகார நடவடிக்கைகள், முக்கிய செயற்பாடுகளாக அமைந்தன. தற்சமயம் இரசாயனப் பொருட்கள், உணவு மற்றும் விவசாயம் புடவை உற்பத்திப் பொருட்கள், மண் மற்றும் உர வகைகள் என்பனவற்றிலும் இவை அவசியமான நடவடிக்கைகளாக வந்துள்ளன. நாட்டிலுள்ள சோதனை ஆய்வுகூடங்கள் சுமுகமான முறையில் செயற்படுவதற்குத் |

| | |
|---|---|
| | தேவையான வளிமண்டல ஆதரவை வழங்குவதற்கும் 2011 ஆம் ஆண்டில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அளவிடற் கூறுகள், தரங்கள், சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து (MUSSD) நாட்டின் தேசிய வளிமண்டல உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதில் ஏற்பட்ட நெருங்கிய உறவு பேருதவியாக இருந்தது.<br><br>சுகாதார சேவைத்துறையில் மருத்துவ ஆய்வுகூட சேவைகளின் நம்பகத்தன்மை, முக்கியமாக கருதப்பட வேண்டிய ஒன்றாகும். மருத்துவ ஆய்வுகூடங்களை மதிப்பீடு செய்வதில் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் என்பனவற்றுடன் இ.த.அ சபை இணைந்து பணியாற்றுகிறது. அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒன்றாக ஆய்வுகூடங்களைத் தரமுயர்த்துவதில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து (05) அரச வைத்தியசாலைகளின் ஆய்வுகூடங்கள் தரமுயர்த்தப்படும். இந்த ஆய்வு கூடங்களின் வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதிலும், ISO 15189 என்ற சர்வதேச தரத்தினால் கோரப்பட்டபடி அவற்றின் தகைமையை அபிவிருத்தி செய்வதிலும், சுகாதார அமைச்சு தற்சமயம் முயற்சி மேற்கொண்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, அரசாங்க / தனியார் துறைகளிலுள்ள மருத்துவ / சிகிச்சை ஆய்வுடங்களைப் பதிவு செய்வதற்கான திட்டமும் பிரேரிக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் மதிப்பீடுகளின் நடுநிலைத்தன்மை, நம்பகத்தன்மை என்பனவற்றிற்கு இ.த.அ சபை உறுதி கூறும். மருத்துவ ஆய்வு கூடங்களின் மதிப்பீடுகளில் தகைமை, அபிவிருத்தி என்பது இ.த.அ சபையினால் மேற்கொள்ளப்பட இருக்கும் மற்றுமொரு முக்கிய நடவடிக்கையாகும். |

| | |
|---|---|
| ஏற்றுமதிகள், இறக்குமதிகள் சம்பந்தப்பட்ட மட்டில், சோதனை முடிந்து அவை விடுவிக்கப்படும் கட்டத்தில், வழிமுறைகள் பொருட்களுக்கான சான்றிதழின் போது, பொருட்கள் சேவைகளின் தரம் சம்பந்தமாக மூன்றாம் தரப்பு உத்தரவாதம் கோரப்படும். இறக்குமதி செய்யப்படும் இடங்களில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய தரச் சான்றிதழ்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுவதனால், வெளிநாட்டு தராதர அங்கீகார அமைப்புக்களுக்கு இலங்கையில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. முற்பாதுகாப்பு நடவடிக்கையாக 2011 ஆம் ஆண்டில் சர்வதேச அமைப்புக் களுடனான பல்தேச அங்கீகார உடன்படிக்கையில் (MLA) இணைந்து கொள்வதன் மூலம், இலங்கையின் தராதர அங்கீகாரத்திற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வெளிநாடுகளின் தராதர அங்கீகார அமைப்புக்களுக்குச் சமமாக வருவதும், தராதர அங்கீகாரத் தொழிலில் ஏனைய அமைப்புக்களுடன் போட்டியிடுவதுமே இலங்கை தராதர அங்கீகார சபையின் திட்டமாகும். வெளிநாட்டு தராதர அங்கீகாரத்தைப் பெற்ற சான்றிதழ் வழங்கும் வெளிநாட்டு அமைப்புக்களுடன் இணைந்துள்ள சான்றிதழ் அமைப்புக்கள் தரமான, சிக்கனமான சேவைகளைப் பெறுவதற்கு இலங்கை தராதர அங்கீகார சபையை அணுகக் கூடும்.<br><br>வர்த்தக சமூகத்திடம் இருந்தும், ஏனைய அமைப்புக்களிடம் இருந்தும் அதிக எண்ணிக்கையான விண்ணப்பங்களைப் பெற்று வரும் பரிசோதனை அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம் | “2011 ஆம் ஆண்டில் சர்வதேச அமைப்புக்களுடனான பல்தேச அங்கீகார உடன்படிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்கையில் (MLA) இணைந்து கொள்வதன் மூலம், இலங்கையின் தராதர அங்கீகாரத்திற்கு சர்வதேச அங்கீகாரம் பெறப்பட்டுள்ளன. வெளிநாடுகளின் தராதர அங்கீகார அமைப்பு களுக்குச் சமமாக வருவதும், தராதர அங்கீகாரத் தொழிலில் ஏனைய அமைப்புகளுடன் போட்டியிடுவதுமே இலங்கை தராதர அங்கீகார சபையின் |

| | |
|---|---|
| ஒழுங்கமைப்பு அதிகாரிகளிடம் இருந்து மிகக் குறைந்த அளவிலான கவனத்தைப் பெற்று வருவதனால், எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. இருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டிலும், தொழில்நுட்ப சட்டங்களின் உரிய முறையிலான நடைமுறைக்கிடலின் வழிமுறையாக ஒழுங்கமைப்பு அதிகாரிகளினால் தராதர அங்கீகாரம் பெற்ற CAB க்களின் உபயோகம் இனங்காணப்பட்டது. இந்த வகையில் ஒழுங்கமைப்பு அதிகாரிகளுடன் இ.த.அ சபை ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இரண்டு புதிய அங்கீகாரத் திட்டங்களான உணவுப்பொருள் பாதுகாப்புப் பரிசோதனை, வாகன நச்சு வாயு வெளியேற்றப் பரிசோதனை என்பன தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணர்களாக உள்ளவர்களுடன் இணைந்து இந்த இரு தராதர அங்கீகாரம் தொடர்பான முக்கிய அம்சங்கள் பற்றி ஆராயப்பட்டு வருகின்றன.<br><br>நாட்டிலுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R மற்றும் D) ஆய்வுக் கூட்டங்களைத் தரமுயர்த்துவதற்கும், இவற்றின் அபிவிருத்தித் திட்டங்களின் தயார்நிலைக்குமான விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க வழிமுறைக்கு இணங்கும் வகையில் சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து, சிறந்த வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும் ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரங்களை மேம்படச் செய்யும் நிலையில் இ.த.அ சபை உள்ளது.<br><br>தராதர அங்கீகாரம் என்பது, குறிப்பிட்ட பணியைப் பூர்த்தி செய்வதில் செயல்முறை ரீதியிலான தகைமை எனக் கருதப்படுவதனால், தரம் மற்றும் தராதர அங்கீகாரம் சம்பந்தமாக இ.த.அ சபை பலதரப்பட்ட பயிற்சித் திட்டங்களையும், செயலமர்வுகளையும் நடத்தியிருந்தது. சபையின் மதிப்பீட்டாளர்கள், ஆய்வுகூட ஊழியர்கள் சம்பந்தப்பட்ட ஏனைய குழுவினர் இதில் பங்குபற்றினார்கள். தகைமை அபிவிருத்தி என்பது, தராதர அங்கீகார மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான அடிப்படை நிலையை உருவாக்குவதற்கு அவசியமாகும். இதற்கு மேலதிகமாக, குறிப்பிட்ட சில குழுவினருக்கு தராதர அங்கீகாரம் பற்றிய விழிப்புணர்ச்சி, அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவும் நடத்தப்பட்டன. | திட்டமாகும்."<br><br>"வர்த்தக சமூகத்திடம் இருந்தும், ஏனைய அமைப்புக்களிடமிருந்தும் பெருமளவு விண்ணப்பங்களை பெற்று வரும் பரிசோதனை அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம் ஒழுங்கமைப்பு அதிகாரிகளிடம் இருந்து மிகக் குறைந்த அளவிலான கவனத்தைப் பெற்று வருவதனால், எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை." |

| | |
|---|---|
| **ஆளுநர் சபை** | சபையினது அதிகாரங்களும், நடவடிக்கைகளும், 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை தராதர அங்கீகார சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், கௌரவ தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட கீழ்க்காணும் 13 அங்கத்தவர்களைக் கொண்ட ஆளுநர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆளுநர் சபை ஒன்றுவிட்டு ஒரு மாதத்தில் கூட்டங்களை நடத்தும்.<br><br>ஆளுநர் சபையில் கீழ்க்காணும் அங்கத்தவர்கள் இடம்பெற்றுள்ளனர். |

| | |
|---|---|
| திரு. திதுதல் கோதாகொட | தலைவர் |
| பேராசிரியர் சிரிமாலி பெர்னாண்டோ | அங்கத்தவர் (தே.வி.மன்றத்தின் தலைவர்) |
| டொக்டர் நிர்மாலி டி சில்வா | அங்கத்தவர் (சிரேஷ்ட விரிவுரையாளர், புடவைகள் திணைக்களம், மொறட்டுவை பல்கலைக்கழகம்) |
| திரு.சுசந்த பெர்னாண்டோ | அங்கத்தவர் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பிரதிநிதி |
| டொக்டர் ஏ.எம்.முபாறக் | அங்கத்தவர் (தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதிநிதி) |

| | | |
|---|---|---|
| | திரு.ஏ.பி.ஜீ.கித்சிரி | அங்கத்தவர் (வர்த்தக அமைச்சின் பிரதிநிதி) |
| | திரு. அசித்த கே செனவிரத்ன | அங்கத்தவர் (கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி) |
| | திரு.கே.பி.குமார | அங்கத்தவர் (அளவீட்டு அலகுகள், தரங்கள், சேவை திணைக்களத்தின் பிரதிநிதி) |
| | பேராசிரியர் எம்.ஐ.தாபரே | அங்கத்தவர் (தேசிய விஞ்ஞான கழகத்தின் பிரதிநிதி) |
| | எச்.ஜீ.ஜீ.ஜே.தர்மசேன | அங்கத்தவர் (விவசாய அமைச்சின் பிரதிநிதி) |
| | என்.ஜீ.பன்டிதரத்ன | அங்கத்தவர் (சுகாதார அமைச்சின் பிரதிநிதி) |
| | திருமதி ஹிரன்சா களுதந்திரி | அங்கத்தவர் (பொதுத் திறைசேரியின் பிரதிநிதி) |
| | திரு.திஸ்ஸ ஜயவீர | அங்கத்தவர் (FCCISL இன் பிரதிநிதி) |
| | திரு.ரி.விக்கிரமசிங்க | செயலாளர், பணிப்பாளர்/பி.நி.உ., இ.த.அ.ச. |

| **முகாமைத்துவம், குழுக்கள், சபையின் ஊழியர்கள்** | |
|---|---|
| இலங்கை தராதர அங்கீகார சபையின் முகாமைத்துவ நடவடிக்கைகள் அனைத்தும் பணிப்பாளர் / பி.நி.அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப, நிதி மற்றும் நிர்வாக ஊழியர்களின் ஆதரவைப் பெற்ற பணிப்பாளர் / பி.நி.அதிகாரி சபையின் சகலவித நிறைவேற்று நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக உள்ளார். அதிகார பீடம் மற்றும் செயற்பாடு என்பனவற்றின் அடிப்படையிலான ஸ்தாபக அமைப்பின் விபரம் இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் தரப்பட்டுள்ளது. | **முகாமைத்துவம்** |
| ஆளுநர் சபைக்கு வழிகாட்டி ஆலோசனை வழங்கவும், இலங்கை தராதர அங்கீகார சபையின் நடவடிக்கைகள், கடமைகளை நிறைவேற்றவுமென சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்ற கீழ்க்காணும் தொழில்நுட்பக் குழுக்களை ஆளுநர் சபை நியமித்துள்ளது. | **குழுக்கள்** |

| | |
|---|---|
| **கொள்கை ஆலோசனைக் குழு** | கொள்கை ஆலோசனைக் குழு இலங்கை தராதர அங்கீகார சபையின் பலதரப்பட்ட துறைகளினதும் அபிவிருத்தி மற்றும் தராதர திட்டங்களின் செயற்பாடு என்பன சம்பந்தமான கொள்கை விடயங்களில் ஆளுநர் சபைக்கு ஆலோசனை வழங்குகிறது. |
| **தராரக் குழுக்கள்** | சம்பந்தப்பட்ட தராதர திட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடு சம்பந்தமான விடயங்களில் ஆலோசனை வழங்குவதிலும் ஒத்தியல்பு மதிப்பீடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அங்கீகரிப்பதிலும் கீழ்க்காணும் தராதர குழுக்களுக்கு பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>1. ஆய்வுகூடங்களின் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் சம்பந்தமான தராதர குழுக்கள்<br>2. மருத்துவ / சிகிச்சை நிலைய ஆய்வுகூடங்கள் சம்பந்தமான தராதரக் குழுக்கள்.<br>3. அமைப்புக்களுக்கு சான்றிதழ் வழங்கும் தராதர குழுக்கள் |
| **தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள்** | சம்பந்தப்பட்ட கடமைகளினால் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் குறிப்பிட்ட விடயங்களில் ஆலோசனைச் சேவைகளை |

| | |
|---|---|
| | வழங்குவதற்கு கீழ்க்காணும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் பொறுப்பு வாய்ந்தவை.<br><br>1. இரசாயனப் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>2. உயிரியல் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>3. இயந்திரவியல் பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>4. வைத்திய / சிகிச்சை நிலையங்கள் பரிசோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள்<br>5. சேதன சான்றிதழ் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>6. சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>7. உணவுப் பாதுகாப்பு சோதனை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக்குழு<br>8. வாகனங்களின் வெளியேற்றப் பரிசோதனை பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>9. தர முகாமைத்துவ வழிமுறைகள் சான்றிதழ் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>10. சூழல் முகாமைத்துவ வழிமுறைகள் சான்றிதழ் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு |
| | கொள்கை ஆலோசனைக் குழுவினதும் தொழில்நுட்பக் குழுவினதும் அமைப்புக்கள் பற்றிய விபரங்கள் இணைப்பு I இல் தரப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| SLAB யின் மனித வள அமைப்பில் சிறியளவிலான உள்ளக ஊழியர் குழுவும் கல்வி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பட்ட தொழில்திறன் நிறுவனங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பாளர்களைக் கொண்ட பாரியளவிலான அமைப்பும் அடங்கும்.<br><br>நிறுவனங்களின் ஒத்தியல்பு மதிப்பீட்டின் தரத்தை உறுதி செய்வதே SLAB யின் கடமை என்பதனால், அந்த சபையின் ஊழியர்கள் இதற்கான திறமையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. ஆரம்ப காலத்தில் இருந்தே SLAB ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக, சபையின் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த அதேசமயத்தில், ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதை அடுத்து ஏனைய தராதர அங்கீகார அமைப்புக்களுக்கு சமமாக SLAB யும் அதன் தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. சாதாரணமாக, புதிதாக சேர்ந்துகொண்ட அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்ட துறையில் தகைமை பெறுவதற்கு குறைந்தது மூன்று வருடங்கள் தேவைப்படும். | **மனித வளம்** |
| | |
| 2011 டிசம்பர் 31 ஆம் திகதியன்று சபையில் கடமையாற்றிய ஊழியர்களின் விபரம் வருமாறு | **சபையின் ஊழியர்கள்** |

| **பதவி** | **அங்கீகாரம்** | **நியமனம்** | **(வெற்றிடம்) / மேலதிகம்** |
|---|---|---|---|
| பணிப்பாளர் / பி.நி.அ | 01 | 01 | - |
| மேலதிக பணிப்பாளர் | 01 | -- | (01) |

| | | | |
|---|---|---|---|
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | 07 | 05 | (02) |
| பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) | 01 | 01 | - |
| முகாமைத்துவம் / கணக்குப் பிரிவு உதவியாளர் | 03 | 01 | (02) |
| சாரதி | 01 | 01 | - |
| அலுவலக உதவியாளர் | 01 | 01 | - |

| | | | |
|---|---|---|---|
| **மதிப்பீட்டாளர்கள் குழு** | பலதரப்பட்ட துறைகளின் நடவடிக்கையில் தராதர அங்கீகார திட்டச் செயற்பாட்டில் SLAB சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணத்துமும், பயிற்சியும் பெற்ற மதிப்பீட்டாளர்களின் சேவைகளை பெற்றுக் கொண்டுள்ளது. SLAB ஊழியர்களுடன் கடமைகளை பொறுப்பேற்கவென பயிற்சிபெற்ற வெளிவாரி மதிப்பீட்டாளர் குழுவொன்று (130) இதற்கென அமைக்கப்பட்டுள்ளது.<br><br>சம்பந்தப்பட்ட ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான கடமையைப் பொறுப்பேற்க முன்னர், அதற்கான தகைமையைப் பெறவென மதிப்பீட்டுப் பயிற்சியாளர்கள் குறிப்பிட்ட தொழிலிலும், குறிப்பிட்ட இடத்திலும் பயிற்சி பெற்றிருப்பது அவசியமாகும். தராதர அங்கீகார தேவைகளின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டில் மதிப்பீட்டாளர் குழுவை விஸ்தரிக்கவென ஒவ்வொரு குழுவிலும் 20 நிபுணர்களைக் கொண்ட இரண்டு (2) பயிற்சித் திட்டங்களை SLAB நடத்தியுள்ளது. | | |
| **தராதர அங்கீகார துறை** | தலைமை மதிப்பீட்டாளர்கள் | தொழில்நுட்ப மதிப்பீட்டாளர்கள் / மதிப்பீட்டாளர்கள் | பயிற்சி பெறும் மதிப்பீட்டாளர்கள் |
| பரிசோதனை | -- | 21 | 16 |
| தரப்படுத்தல் | 02 | 05 | 04 |
| மருத்துவப் பரிசோதனை | -- | 12 | 26 |
| சான்றிதழ் | 03 | 04 | 29 |
| சோதனை | -- | -- | 08 |
| SLAB ஊழியர் | 03 | 01 | 01 |
| மொத்தம் | 08 | 43 | 84 |

| | **நடவடிக்கைகள்** |
|---|---|
| SLAB யின் முக்கிய நடவடிக்கை ISO/IEC 17011: 2004 க்கு அமைவான வழிமுறைகள், வழிகாட்டி நெறிகள் என்பனவற்றின் அடிப்படையிலான தராதர அங்கீகார திட்டங்களை நடைமுறைக் கிடுவதாகும். SLAB யினால் நடத்தப்படும் முக்கிய தராதர அங்கீகார திட்டங்களின் விபரங்கள் வருமாறு:<br><br>• ISO/IEC 17025 யின் அடிப்படையிலான பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கான தராதர அங்கீகார திட்டம்<br>• ISO 15189 அடிப்படையிலான மருத்துவ மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்<br>• ISO/IEC 17021 அடிப்படையிலான வழிமுறைகளுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்<br>• ISO/IEC வழிகாட்டி 65 அடிப்படையிலான உற்பத்திப் | **ISO/IEC 17011க்கு அமைய முகாமைத்துவ மற்றும் SLAB செயற்பாடும் தராதர அங்கீகார நடவடிக்கைகளும்** |

| | |
|---|---|
| பொருட்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டம்.<br>• ISO/IEC 17024 அடிப்படையிலான ஆட்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் அமைப்புகளுக்கான தராதர அங்கீகார திட்டம்<br>• ISO/IEC 17020 அடிப்படையிலான பரிசோதனை அமைப்புக்களுக்குரிய தராதர அங்கீகாரத் திட்டம்<br><br>2011 ஆம் ஆண்டிலும் மேற்குறிப்பிட்ட தராதர அங்கீகார திட்டங்களின் முகாமைத்துவ வழிமுறைகளை மேற்கொள்ளவும் மேம்படுத்தவும் SLAB நடவடிக்கை மேற்கொண்டது. APLAC யினால் 2011 நவம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட மீள் மதிப்பீட்டில் ISI 15189 உட்பட APLAC/ILAC MRA ஐ தொடர்ந்தும் நிலைநாட்டுவதில் அது வெற்றி கண்டது. பசிபிக் தராதர அங்கீகார கூட்டமைப்பு (PAC) மற்றும் சர்வதேச தராதர அங்கீகார மன்றம் (IAF) என்பனவற்றின் வழிகாட்டி நெறிகளுக்கு சமமாக சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகார திட்டங்களை அபிவிருத்தி செய்வதிலும் அது வெற்றி கண்டது. | |
| ISO/IEC 17025:2005 அடிப்படையிலான பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான ஆய்வுகூட தராதர அங்கீகாரம் SLAB யினால் வழங்கப்படும் தராதர அங்கீகார சேவைகளில் முக்கிய இடத்தை வகிக்கிறது. தேவையற்ற தொழில்நுட்ப தடைகளை விலக்கவும், நம்பகமான பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக் கொள்ளவும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத் துறையினருக்கு உதவி வழங்கவுமென பரிசோசதனை ஆய்வு கூடங்களின் தராதர அங்கீகாரத்தில் 2011 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது.<br><br>இந்த வருடத்தில் ஏழு (7) தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டதை அடுத்து, மொத்தமாக (37) தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (7) புதிய விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தராதர அங்கீகார திட்டத்தின் அடிப்படையில் (22) கண்காணிப்பு மதிப்பீடுகளும், (7) பூர்வாங்க மதிப்பீடுகளும் (2) மீள் மதிப்பீடுகளும் (3) முன் மதிப்பீடுகளும், ஒரு தொடர்ச்சி மதிப்பீடும் இந்த வருடத்தில் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. உணவு மற்றும் விவசாயப் பொருட்கள் மண், சீமெந்து மற்றும் கொங்றிட், புடவை வகைகள், உரம், கால்நடை பரிசோதனை என்பன சம்பந்தமான இரசாயனப் பரிசோதனை, உயிரியல் பரிசோதனை, பௌதீக / இயந்திரவியல் பரிசோதனை, ஆகிய துறைகளில் தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. | **பரிசோதனை ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம்** |

| | |
|---|---|
| **தரப்படுத்தல் ஆய்வு கூடங்களின் தராதர அங்கீகாரம்** | ISO/IEC 17025:2005 இன் பிரகாரம் தராதர அங்கீகாரம் பெற்ற தரப்படுத்தல் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும், பரிசோதனை மேற்கொள்ளும் ஆய்வுகூடங்கள் நம்பகமாக பெறுபேறுகளை வழங்குவதற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவைகள், தரங்கள் என்பனவற்றைப் பரப்புவதற்குமென பலமான வளிமண்டல |

| | |
|---|---|
| | உட்கட்டமைப்பு தேவைப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் தராதர அங்கீகார திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள அதிக எண்ணிக்கையான தரப்படுத்தல் ஆய்வுகூடங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>மூன்றாக (3) இருந்த தரப்படுத்தல் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கைக்கு மேலும் ஒன்று (1) சேர்த்துக் கொள்ளப்பட்டது. MUSSD உட்பட இரண்டு (2) புதிய விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவற்றுள் ஒன்று (1) அந்த வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பூர்வாங்க மதிப்பீட்டிற்கும், ஏனைய இரண்டு மதிப்பீட்டிற்கு முன்னரான விண்ணப்பங்களாகும். தரப்படுத்தல் ஆய்வில் பொருட்களின் திண்மம், வெப்பதட்ப நிலை, நீளம், காலப் பிரமாணம், தொகை, அழுத்தம் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டன. |
| **மருத்துவ / தரப்படுத்தல் ஆய்வுகூடங்களின் தராதர அங்கீகாரம்** | மருத்துவ / தரப்படுத்தல் ஆய்வுகூடங்களின் ISO 15181 அடிப்படையிலான தராதர அங்கீகாரத் திட்டம், சர்வதேச வழிமுறைகள், தரங்களுக்கு உட்பட்ட வகையில் சகல மதிப்பீட்டு வழிமுறைகளுக்கும் உட்பட்டு நடைமுறைக்கிடப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் ஆய்வுகூடங்களில் தரமான முகாமைத்துவ வழிமுறைகளை சுகாதார அமைச்சின் அரச மருத்துவ ஆய்வுகூடங்களில் அபிவிருத்தி செய்வது பற்றிய அக்கறை, மருத்துவத் துறையில் நம்பகமான சேவையை வழங்குவதில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்.<br><br>மருத்துவ ஆய்வுகூட சேவையாளரின் தகைமையை மேம்படச் செய்யவும், வழமையான பரிசோதனைகள், விசேட பரிசோதனைகள், அதியுயர் பரிசோதனைகள் ஆகிய மூன்று (3) அடிப்படைக் குழுக்களின் கீழ் மேற்குறிப்பிட்ட துறைகளிலான மருத்துவப் பரிசோதனைகளை தரப்படுத்தவும், உயிரியல் இரசாயனம், நுண்ணுயிரியல் உட்பட நான்கு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு நிபுணத்துவ குழுக்கள், தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டன.<br><br>ISO 15189 அடிப்படையில் ஒன்பது (9) மருத்துவ / தரப்படுத்தல் ஆய்வுகூடங்களுக்கு தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டது. மருத்துவ ஆய்வுகூடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஐந்து (5) விண்ணப்பங்களுக்கு தராதர அங்கீகாரம் வழங்கவென மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நான்கு (4) முன் மதிப்பீடுகள், மூன்று (3) கண்காணிப்பு மதிப்பீடுகள், நான்கு (4) மீள் மதிப்பீடுகள், ஆறு (6) பூர்வாங்க மதிப்பீடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. |
| **சான்றிதழ் அமைப்புகளுக்கான தராதர அங்கீகாரம்** | தராதர அங்கீகார சான்றிதழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் நேரடியாக அனுசரனை வழங்குவதனால், சான்றிதழ் அமைப்புக்களுக்கான தராதர அங்கீகாரம் என்பது SLAB மிகுந்த அக்கறை செலுத்தும் மற்றுமொரு துறையாகும். ஆய்வுக்கு உட்பட்ட வருடத்தில் வழிமுறைகள் சான்றிதழ் அமைப்புக்கள் சம்பந்தமாக ISO/IEC 17021 மற்றும் உற்பத்திப் பொருள் சான்றிதழ் அமைப்புக்கள் சம்பந்தமாக ISO/IEC வழிகாட்டி 65 என்பனவற்றின் அடிப்படையில் தராதர அங்கீகாரத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன.<br><br>தராதர அங்கீகாரத்திற்கென பெற்றுக்கொள்ளப்பட்ட நான்கு (4) விண்ணப்பங்கள் மீது மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று (3) விண்ணப்பங்களுக்கு தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஒரு (1) முன் மதிப்பீடு, நான்கு (4) கண்காணிப்பு மதிப்பீடு, இரண்டு (2) பூர்வாங்க |

| | |
|---|---|
| | மதிப்பீடு என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. QMS, EMS, FSMS மற்றும் உற்பத்திப் பொருட்கள் ஆகிய துறைகளில் மதிப்பீடுகள் இடம்பெற்றன. |

| | |
|---|---|
| சட்டங்களை நடைமுறைக்கிடுவதில் பலதரப்பட்ட அமைப்புக்களுக்கும் பரிசோதனை மற்றும் தராதர அங்கீகார சேவைகளை வழங்குமென தராதர அங்கீகாரம் பெற்ற பரிசோதனை அமைப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தராதர அங்கீகாரம் பெற்ற 'CAB' க்களின் உபயோகத்தை மேம்படச் செய்வதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கமைப்பு நிறுவனங்களினால் உபயோகிக்கப்படுவதை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. ISO/IEC 17020 இன் அடிப்படையிலான பரிசோதனை அமைப்புக்களுக்குரிய தராதர அங்கீகார திட்டத்தைக் கொண்ட சட்டங்களும், பிரமாணங்களும் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டன. உணவுப்பொருள் பரிசோதனை மற்றும் வாகன பரிசோதனை சம்பந்தமான விசேட வழிவகைகள் தற்சமயம் தயாரிக்கப்படுகின்றன. | **பரிசோதனை அமைப்புக்களின் தராதர அங்கீகாரம்** |
| R & D மற்றும் பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் இருந்து அவற்றின் ஆராய்ச்சி, வழிமுறைகள் அபிவிருத்திப் பணிகளுக்கு அங்கீகாரம் பெறுவது சம்பந்தமாக கோரிக்கைகள் கிடைத்ததனால், சிறந்த ஆய்வுகூட வழிமுறைகள் சம்பந்தமான (GLP) தராதர அங்கீகாரத் திட்டம் பற்றி SLAB நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அதேவேளை, இலங்கைக்கான ST&I யின் வழிமுறைகள் 2011/15 இன் நடவடிக்கைகளின் அடிப்படையில் R&D மற்றும் ஏனைய ஆய்வுகூடங்களுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் அதிகாரம் SLAB க்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கென புதியதொரு தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டதை அடுத்து, இலங்கை கட்டளைகள் பணியகத்தின் பங்களிப்புடன் (SLSI) சிறந்த ஆய்வுகூட வழிமுறைகளுக்கான தேசிய தரம் உருவாக்கப்பட்டது. | **சிறந்த ஆய்வுகூட வழிமுறைகளின் தராதர அங்கீகாரம்** |
| மருத்துவப் பரிசோதனை, தரப்படுத்தல் உட்பட்ட தராதர அங்கீகாரத் திட்டங்களின் முக்கியமான அம்சம், திறமைப் பரிசோதனை சம்பந்தமான வெளிவாரி பங்களிப்பின் மூலமும், அல்லது ஆய்வுகூடங்களுக்கு இடையிலான ஒப்பீட்டுத் திட்டங்கள் மூலமும் பரிசோதனை பெறுபேறுகளின் தரத்திற்கு உறுதி கூறுவதாகும். பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கு உதவும் வகையில் கைத்தொழில் தொழில்நுட்பட நிலையத்தின் திறமைப் பரிசோதனைத் திட்டங்களும், இலங்கை பரிசோதனை ஆய்வுகூட சங்கத்தின் (SLATL) திறமைப் பரிசோதனைத் திட்டங்களும் இலங்கை தராதர அங்கீகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டதோடு, நீர் சிறு உயிரியல் மற்றும் மீனில் பலதரப்பட்ட இரசாயன ஆய்வுகள் போன்ற துறைகளில் திறன் பரிசோதனையும் தொடர்ந்து வழங்கப்பட்டது. இவற்றுக்கு மேலதிகமாக, அங்கத்துவ அமைப்புக்களினால் APLAC யினால் நடத்தப்பட்ட திறன் பரிசோதனைகளும், வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியினால் நடத்தப்பட்ட திறன் பரிசோதனைகளும், பரிசோதனை மற்றும் மருத்துவ ஆய்வுகூடங்களுடன் இணைக்கப்பட்டன.<br><br>மருத்துவப் பரிசோதனை, தரப்படுத்தல் ஆகிய துறைகளில் திறன் பரிசோதனை அல்லது ஆய்வுகூடங்களுக்கு இடையிலான ஒப்பீட்டுத் | **திறமைப் பரிசோதனைத் திட்டங்களை ஒன்றிணைத்தல்** |

| | |
|---|---|
| திட்டங்கள் என்பனவற்றை ஒழுங்கமைப்பதில் சுகாதார அமைச்சுடனும் MUSSD யுடனும் கலந்துரையாடல்கள் முறையே மேற்கொள்ளப்பட்டன. | |

| | |
|---|---|
| **2011 ஆம் ஆண்டின் செயற்பாட்டு முக்கிய அம்சங்கள்** | 2011 ஆம் ஆண்டில் SLAB மொத்தம் ஐந்து ஆண்டுகளுக்கான நடவடிக்கைகளை முடித்துக் கொண்டது. மேலும் அதிக எண்ணிக்கையான சம்பந்தப்பட்ட பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள், சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் என்பனவற்றக்கு SLAB சர்வதேச தரங்களுக்கு அமைய அதன் சேவைகளை வழங்கியது. இந்த தராதர அங்கீகார திட்டங்கள் சர்வதேச கொள்கைகளுக்கு அமையவும், தராதர அங்கீகார அமைப்புக்களுக்கான ISO/IEC 17011 க்கு அமையவும் முகாமைத்துவப் படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டன.<br><br>**SLAB யின் முகாமைத்துவ வழிமுறைகளின் அபிவிருத்தி**<br><br>PAC MLA இல் சேர்ந்து கொள்வதற்கான விண்ணப்பம் ஒன்று PAC க்கு சமர்பிக்கப்பட்டதை அடுத்து, SLAB முகாமைத்துவ வழிமுறைகள், PAC மற்றும் IAF வழிமுறைகளின் அடிப்படையில் QMS மற்றும் EMS சான்றிதழ், உற்பத்திப் பொருள் சான்றிதழ் வழங்கல் போன்ற பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் விஸ்தரிக்கப்பட இருந்தது. இவற்றுக்கு மேலதிகமாக, APLAC/ILAC MRA வின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் APLAC மற்றும் ILAC வழிகாட்டி நெறிகளின் புதிய மாற்றங்கள் மற்றும் சேர்க்கைகள் என்பனவற்றின் அடிப்படையில் ஆவணப்படுத்தலும் புனரமைக்கப்பட்டது.<br><br>உயிரியல் பரிசோதனைகள், இயந்திரவியல் பரிசோதனைகள் மற்றும் தரப்படுத்தல் என்பனவற்றுக்கான விசேட தீர்மானங்கள் முடிவு செய்யப்பட்டு, பரிசோதனை, இரசாயனப் பரிசோதனை என்பனவற்றுக்கான விசேட தீர்மானங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. உணவுப் பொருள் பரிசோதனை, வாகனத்தில் இருந்து நச்சுவாயு வெளியேற்றப் பரிசோதனை, தேயிலை உற்பத்திப் பொருளுக்கான சான்றிதழ் வழங்கல், QMS சான்றிதழ், EMS சான்றிதழ் மற்றும் GLP என்பனவற்றுக்கான விசேட தீர்மானங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன.<br><br>**தராதர அங்கீகார சேவைகள்**<br><br>2011 ஆம் ஆண்டில் தராதர அங்கீகார பரிசோதனை ஆய்வு கூடங்களில் (7) தராதர அங்கீகாரங்கள் சேர்க்கப்பட்டதோடு, மருத்துவ / சிகிச்சை நிலைய ஆய்வுகூடங்களில் நான்கு தராதர அங்கீகாரங்கள் சேர்க்கப்பட்டன. அதேவேளை, FSMS, EMS மற்றும் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் கீழான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களில் (4) தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வுகூடங்கள், மருத்துவ மற்றும் சிகிச்சை நிலைய பரிசோதனை ஆய்வுகூடங்கள் என்பனவற்றை பரிசோதிப்பதில் (24) மற்றும் (03) கண்காணிப்புக்கள் நடத்தப்பட்டன. சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களில் (03) கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனைகளில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க மதிப்பீடுகள் மற்றும் மீள் மதிப்பீடுகளின் |

| | |
|---|---|
| | எண்ணிக்கை (17) உம் (06) ஆகும்.<br><br>பரிசோதனை ஆய்வுகூடங்கள் (மருத்துவமற்றது), மருத்துவ ஆய்வுகூடங்கள் மற்றும் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள், என்பனவற்றில் வருட இறுதியளவில் மொத்தம் முறையே (37), (09), (04) தராதர அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.<br><br>ஆய்வுகூட தராதர அங்கீகாரத் திட்டங்கள் மற்றும் SLAB யின் முகாமைத்துவம், செயற்பாடு என்பன சம்பந்தமாக APLAC யின் குழுவினர் நடத்திய மதிப்பீட்டைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டில் ISO 15189 உட்பட்ட பரிசோதனைகள் சம்பந்தமான சர்வதேச ஆய்வுகூட தராதர அங்கீகார பரஸ்பர ஒத்துழைப்பு அங்கீகார உடன்படிக்கையில் SLAB கைச்சாத்திட அனுமதிக்கப்பட்டது. மருத்துவப் பரிசோதனை உட்பட சகலவித பரிசோதனைகளின் பூர்வாங்க மதிப்பீடு, தரப்படுத்தல், மீள் மதிப்பீடு என்பன APLAC குழுவினரால் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. |

| | |
|---|---|
| ஆசிய பசிபிக் ஆய்வுகூட தராதர அங்கீகார ஒத்துழைப்பு அமைப்பிலும் (APLAC), சர்வதேச ஆய்வுகூட தராதர அங்கீகார கூட்டமைப்பிலும் (ILAC) முழு அளவிலான அங்கத்துவ அந்தஸ்தை SLAB பெற்றுக் கொண்டுள்ளது. ILAC மற்றும் APLAC MRA யில் கைச்சாத்திடுவதற்கு 2009 ஆம் ஆண்டில் SLAB அனுமதிக்கப்பட்ட அதேசமயத்தில், 2011 ஆம் ஆண்டிலும் MRA அந்தஸ்து தொடரப்பட்டது. தராதர அங்கீகாரத்திற்கென APLAC மற்றும் ILAC MRA யில் SLAB யை அனுமதிப்பதற்கான மதிப்பீட்டை 2011 ஆம் ஆண்டில் APLAC நடத்தியது.<br><br>இதற்கு மேலதிகமாக பசிபிக் தராதர அங்கீகார ஒத்துழைப்பில் (PAC) அங்கத்துவ அந்தஸ்தை SLAB பெற்றுக் கொண்டதோடு, PAC பலநோக்கு அங்கீகார உடன்படிக்கையில் (MLA) சேர்த்துக் கொள்வதற்கென PAC யின் மதிப்பீட்டிற்கும் 2011 ஆம் ஆண்டில் சபை விண்ணப்பித்திருந்தது. அதேவேளை, சர்வதேச தராதர அங்கீகார மன்றத்தில் (IAF) பூரண அங்கத்துவம் பெறுவதற்கான விண்ணப்பத்தையும் 2011 ஆம் ஆண்டில் SLAB சமர்ப்பித்திருந்தது.<br><br>ஜேர்மனியின் PTB மற்றும் வெளிவிவகார அமைச்சு என்பனவற்றின் வேண்டுகோளின் பேரில் SAARC-PTB தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் கீழும் ISO/IEC 17021 மற்றும் ISO/IEC வழிகாட்டி 65 யின் கீழான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்களுக்குரிய பிராந்திய பயிற்சித் திட்டம் ஒன்றை 2011 டிசம்பர் மாதம் 14-16 திகதிகளில் SLAB நடத்தியது. | **சர்வதேச பெறுபேறுகளும் நிகழ்வுகளும்** |

| | |
|---|---|
| இந்தச் செயலமர்வில் சார்க் நாடுகளைச் சேர்ந்த (19) பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள். இந்த திட்டத்தில் ஒரு பயிற்சி வழங்குபவராக திரு.ரீ.விக்கிரமசிங்க சேவையாற்றினார். | |

| | |
|---|---|
| தராதர அங்கீகார மதிப்பீட்டு அமைப்புக்களின் (ஆய்வுகூடங்கள் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் மற்றும் பரிசோதனை நிலையங்கள்) அதிகாரிகளினது விழிப்புணர்ச்சியையும் செயல்திறனையும் தரமுயர்த்தவென SLAB ஒழுங்கான அடிப்படையில் பயிற்சித் திட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்துகிறது. தராதர அங்கீகார தரங்கள் மற்றும் அவை சம்பந்தமான கொள்கைகள் என்பனவற்றுக்கு இணைந்த வகையில் தரங்கள் சம்பந்தமான தராதர அங்கீகாரத்துடன் தொடர்புபட்ட விடயங்களில் இவை இடம்பெற்றன. 2011 ஆம் ஆண்டில் 10 பயிற்சி நடவடிக்கைகளும், 6 கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.<br><br>SLAB இரண்டு மதிப்பீட்டாளருக்கான பயிற்சித் திட்டங்களை மருத்துவ ஆய்வுகூடங்கள் (ISO 15189 அடிப்படையிலானது) சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17021 & ISO/IEC அடிப்படையிலானது) நடத்தியது. தராதர அங்கீகார அமைப்புக்கள் சம்பந்தமான இரண்டாவது நிகழ்ச்சித திட்டம் இந்தியாவின் தேசிய தராதர அங்கீகார சான்றிதழ் வழங்கும் அமைப்புடன் (NABCB) இணைந்து மேற்கொள்ளப்பட்டது. 20 க்கும் அதிகமான பிரதிநிதிகள் இவற்றில் பங்குபற்றினார்கள்.<br><br>மதிப்பீட்டாளர்களின் அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளவும் மேம்படச் செய்யவுமென பரிசோதனைகள் மற்றும் தரப்படுத்தல் ஆய்கூவுடங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள் என்பன சம்பந்தமாக ஒவ்வொன்றும் இரண்டு கூட்டங்களும் சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கென ஒரு கூட்டமும் என்ற வகையில் மதிப்பீட்டாளர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. | **சக்திவள கட்டமைப்பும் பயிற்சி திட்டங்களை நடத்துதலும்** |

| | |
|---|---|
